


ஆன்மிக சிகரத்தின்

# நம்ம ஊரு நியூஸ்

RNI No: TNTAM/2017/75122




Editor: V.S.N.Sharma | Chief Reporter : S.Esakki | Chennai : 9710755689 | 9962505384 | 4 பக்கம் | 10.3.2026 செவ்வாய்க்கிழமை

## மாநிலங்களவைத் தேர்தலில்

# 6 வேட்பாளர்களும் தேர்வு




சென்னை, மார்ச் 10: தமிழகத்தில் இருந்து திமுக சார்பில் திருச்சி சிவா, அந்தியூர் செல்வராஜ், என்.ஆர்.இளங்கோ, கனிமொழி சோமு, அதிமுக சார்பில் தம்பிதுரை, தமாகா தலைவர் ஜி.கே.வாசன் (அதிமுக கோட்டா) ஆகிய 6 மாநிலங் களவை உறுப்பினர்களின் பதவிக் காலம் ஏப்.2-ம் தேதியுடன் நிறைவடைகிறது.

இந்த 6 இடங்களுக்கான தேர்தல் கடந்த பிப்.18-ம் தேதி அறிவிக்கப்பட்டது. தேர்தல் நடத்தும் அதிகாரியாக இரா.சாந்தி, உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியாக பி.தேன் மொழி ஆகியோர் நியமிக்கப் பட்டனர். வேட்புமனு தாக்கல் கடந்த பிப்.26-ம் தேதி தொடங்கியது. திமுக கூட்டணியில், திமுக சார்பில் மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா, செய்தித் தொடர்பு பிரிவு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், காங்கிரஸ் சார்பில் கிறிஸ்டோபர் திலக், தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ் ஆகிய 4 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

அதிமுக கூட்டணியில் அதிமுக சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர் தம்பிதுரை, பாமக தலைவர் அன்புமணி ஆகிய இருவரும் வேட்புமனு தாக்கல் செய்தனர். இவர்கள் சார்பில் 6 மாற்று வேட்பாளர் களும் வேட்புமனு தாக்கல் செய்தனர். பிரதான வேட்பாளரின் வேட்புமனு ஏற்கப்பட்டால், தன்னிச்சையாக மாற்று வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலும், பாமக நிறுவனர் ராமதாஸ் தரப்பில் சுவாமிநாதன் மற்றும் 6 சுயேச்சை வேட்பாளர்களும் மனு தாக்கல் செய்தனர்.

மனுக்கள் பரிசீலனை கடந்த 6-ம் தேதி நடைபெற்றது. இதில் திமுக, அதிமுக கூட்டணி கட்சிகள் சார்பில் போட்டியிடும் 6 பேரின் வேட்புமனுக்களும் ஏற்கப்பட்டன. எம்எல்ஏக்களின் முன்மொழிவு கடிதங்கள் இல்லாததால் சுவாமிநாதன் உள்ளிட்ட மற்ற அனைவரது மனுக்களும் நிராகரிக்கப் பட்டன.

இந்த நிலையில், வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கான அவகாசம் நேற்று மாலை 3 மணியுடன் முடிவடைந்தது. அதன் பின்னர், திமுக, அதிமுக கூட்டணியின் 6 வேட்பாளர்களும் போட்டியின்றி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டனர். இது தொடர்பாக சென்னை தலைமைச் செய லகத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரி இரா.சாந்தி நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

12 மனுக்கள் நிராகரிப்பு: தமிழகத்தில் கடந்த 2019-ம் ஆண்டு நடைபெற்ற மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளுக் கான தேர்தலில் வெற்றி பெற்ற 6 பேரின் பதவிக் காலம் ஏப்.2-ம் தேதியுடன் முடி வடைகிறது. இதையொட்டி, அந்த பதவிகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டு, 18 வேட்புமனுக்கள் பெறப்பட்டன. இதில் 12 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. முறையாக பூர்த்தி செய்து தாக்கல் செய்யப் பட்ட 6 வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன.

மனுக்களை திரும்பப் பெற இன்று (மார்ச் 9) கடைசி நாள். இன்று மாலை 3 மணி நிலவரப்படி, இத்தேர்தலில் நிரப்பப்பட வேண்டிய 6 இடங்களின் எண்ணிக்கையும், சட்டப்படி செல்லத்தக் கதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக உள்ளதால், மக்கள் பிரதிநிதித்துவச் சட் டம் மற்றும் தேர்தல் நடத்தும் விதி களின்படி, திருச்சி சிவா (திமுக), கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் (திமுக), கிறிஸ்டோபர் திலக் (காங்கிரஸ்), எல்.கே.சுதீஷ் (தேமுதிக), தம்பிதுரை (அதிமுக), அன்புமணி (பாமக) ஆகிய 6 பேரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள னர்.

வேட்புமனு பரிசீலனையின்போது, ஒரு வேட்பாளர் மீது ஆட்சேபம் தெரிவிக்கப் பட்டது. அதுகுறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டது. இன்று மாலை 3 மணி வரை எந்த பதிலும் வராத நிலையில், அந்த வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

வெற்றிச் சான்றிதழ்: மாநிலங்களவை உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட தம்பிதுரை, அன்புமணி, எல்.கே.சுதீஷ், கிறிஸ்டோபர் திலக் ஆகியோர் வெற்றி பெற்றதற்கான சான்றிதழ்களை பெற்றுக் கொண்டனர். திருச்சி சிவா, ரவீந்திரன் ஆகிய இருவரும் நாளை பெற உள்ளனர்.





### பெரம்பலூரில் 10வது புத்தகத் திருவிழா நிறைவுற்றது

# ரூ.92,10,240 மதிப்பிலான புத்தகங்கள் விற்பனை

பெரம்பலூர், மார்ச் 10: பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம், மக்கள் பண்பாட்டு மன்றம்மற்றும்தென்னிந்திய புத்தக பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இணைந்து பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் எதிரில் உள்ள திடலில் 27.02.2026 அன்று கோலாகலமாகத் தொடங்கி 10 நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற 10வது பெரம்பலூர் புத்தகத் திருவிழாவின் நிறைவு நாள் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி தலைமையில் நடைபெற்றது.

நிறைவுநாள் விழாவினை தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்வி நிறுவனங்கள் ஒருங்கிணைத்து வழங்கினர். புத்தக அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு, தினந்தோறும் வருகை புரிந்த நபர்களின் எண்ணிக்கை, விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் விவரங்கள் குறித்து புத்தக பதிப்பாளர்களிடம் கேட்டறிந்தார்.

10 நாட்கள் புத்தகத் திருவிழாவினை சிறப்பான ஒருங்கிணைத்து வழங்கிய தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், ஆதவ் பப்ளிக் பள்ளி, ஆபிசர்ஸ் கிளப், பெரம்பலூர், ஈடன் கார்டன் கல்வி நிறுவனங்கள்,ஸ்ரீராமகிருஷ்ணா கல்வி நிறுவனங்கள், தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்வி நிறுவனத்தார்களையும், பபாசி அமைப்பினர் , மக்கள் பண்பாட்டு மன்ற தலைவர்சரவணன், செயலர் அரவிந்தன் ஆகியோருக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் பொன்னாடை அணிவித்து, புத்தகம் மற்றும் நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தார்கள்.

மேலும், புத்தகத்திருவிழா சிறப்புடன் நடக்க பணியாற்றிய அரசுத்துறை அலுவலர்கள், தன்னார்வலர் அமைப்பினரையும் மாவட்ட ஆட்சித்தலைவர் கௌரவித்தார்கள்.

மேலும், இன்றைய நிறைவு நாள் விழாவில் கலைமாமணி, பேராசிரியர், முனைவர் கு.ஞானசம்பந்தம் நடுவராக பங்கேற்ற "மனித மனங்களை மென்மைப்படுத்துவது கலையா?, இலக்கியமா?" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. பத்து நாட்கள் மிக எழுச்சியோடும், சிறப்போடும் நடைபெற்ற புத்தகத் திருவிழாவினை 75,722 பேர் பார்வையிட்டுள்ளனர். ரூ.92,10,240 மதிப்பிலான புத்தகங்கள் விற்பனையாகி உள்ளன.

100 அரங்குகளில், 10,000 தலைப்புகளில் 1 லட்சம் புத்தகங்களுடன் நடைபெற்ற புத்தகத்திருவிழாவில் அனைத்து புத்தகங்களும் அதன் விலையில் 10% சிறப்பு தள்ளுபடி வழங்கப்பட்டன. தினந்தோறும் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், வருவாய் கோட்டாட்சியர் அனிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சொர்ணராஜ், தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்வி நிறுவனங்களின் தலைவர் வரதராஜன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள், மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.




### மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன் தலைமையில்,

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



பெரம்பலூர், மார்ச் 10: பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன் தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் இருக்கும் இடத்திற்கே சென்று கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட மாவட்ட வருவாய், முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள், அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்கள், கடந்த வாரங்களில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், ஒரு மாதத்திற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்படாத மனுக்களின் விவரங்களையும், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, தொழில் தொடங்க கடன் உதவி, வீட்டு மனைப் பட்டா, விதவை உதவித்தொகை, ஆதரவற்றவற்றோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், கல்விக் கடன் கோருதல், இலவச தையல் இயந்திரம் கோருதல், கலைஞர் மகளிர் உரிமை தொகைத் திட்டம், கலைஞர் கனவு இல்லம் திட்டம், அடிப்படை வசதிகள் கோருதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 526 மனுக்களை பொதுமக்களிடமிருந்து மாவட்ட வருவாய் அலுவலர் உள்ளிட்ட அலுவலர்கள் பெற்றுக்கொண்டனர்.

இக்கூட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் வாசுதேவன், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் சிவக்கொழுந்து, தாட்கோ பொது மேலாளர் கவியரசு, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



### சட்ட மன்ற தேர்தல்; போலீசாருடன் இணைந்து பணியாற்ற வந்த

# எல்லை பாதுகாப்பு படையினருக்கு வரவேற்பு!



பெரம்பலூர், மார்ச் 10: பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தல் பணிக்காக சிவகாந்த் பாத்தியா, *Assistant Commandant* தலைமையில் *Border Security Force (BSF)* எல்லையோர காவல் படையினர் 1 அதிகாரி மற்றும் 35 காவல் பணியாளர்கள் பெரம்பலூர்மாவட்டத்திற்கு வந்தடைந்து அறிக்கை செய்தனர்.

மேற்படி எல்லையோர காவல் படையினரை பெரம்பலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் G.S. அனிதா, இ.கா.ப., உத்தரவின்பேரில் மாவட்ட குற்றப்பிரிவு துணைக்காவல் கண்காணிப்பாளர் கர்ணன் அவர்கள் வரவேற்றார். மேலும், தேர்தல் பாதுகாப்பு பணிக்காக வருகை தந்துள்ள எல்லையோர காவல் படையினர் பெரம் பலூர் ரோவர் கல்லூரி வளாகத்தில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

சட்டமன்ற தேர்தல் காலத்தில் மாவட்டத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இவர்கள் மாவட்ட காவல் துறையுடன் இணைந்து பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ளனர்.

வாய்மையே வெல்லும்

# சோழா கேப்பிட்டல்

# CHOLA CAPITAL

G.மைக்கேல்ராஜ் 9840612423 | S.P.சத்தியமூர்த்தி 99406 57605

அலுவலகம் எண் : 9342733367

எண் : 43, கே.கே.சாலை, எம்.ஜி.ஆர் நகர், சென்னை – 600 078.



# தூத்துக்குடியில் உலக மகளிர் தின விழா: அமைச்சர் கீதா ஜீவன் விருது வழங்கினார்

தூத்துக்குடி, மார்ச் 10: தூத்துக்குடியில் நடைபெற்ற உலக மகளிர் தின விழாவில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்களுக்கு அமைச்சர் கீதா ஜீவன் விருதுகளை வழங்கினார்.

தூத்துக்குடியில் தாய்மை உதவும் கரங்கள் அறக்கட்டளை சார்பில் உலக மகளிர் தின விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடை பெற்றது.இவ்விழாவிற்கு அறக்கட்டளை நிறுவனர் பி. ராஜம் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் எம்.எஸ். ரூபா வரவேற்புரையாற்றினார். பிரபல நகைச்சுவை நடிகர் கிங்காங் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி. கீதா ஜீவன் நிகழ்வில் பங்கேற்று, பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்களுக்கு விருதுகளை வழங்கினார். மருத்துவம், கல்வி, கலை மற்றும் சமூக சேவைத் துறைகளில் சிறந்து விளங்கிய முனைவர் எம்.எஸ். ரூபா, பல் மருத்துவர் ஐஸ்வர்யா, டாக்டர் ராஜலட்சுமி, வழக்கறிஞர் விஜயலட்சுமி, தொழிலதிபர் கிருஷ்ணா ராதாகிருஷ்ணன், பாடகி விஸ்வரூபினி மற்றும் பேராசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டோருக்கு அமைச்சர் விருதுகளை வழங்கினார்.

இவ்விழாவில் மாற்றுத் திறனாளிகள், கைம்பெண்கள் மற்றும் நலிவடைந்தோருக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மேலும், முனைவர் சகா.மா. சங்கர் கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, பங்கேற்பாளர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.



## திருச்செந்தூர் முருகன் கோவில் மாசி இசைத் விழா:

# 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்பு!

திருச்செந்தூர், மார்ச் 10: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் கலையரங்கத்தில் மாசி இசைத் திருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது. இதில் பல்வேறு நகரங்களிலிருந்து வந்திருந்த இசைப் பள்ளி மாணவர்கள் தங்களது கலைத் திறமைகளை வெளிப் படுத்தினர்.

இந்த இசைத்திருவிழாவில் சென்னை, கோவை, திருச்சி, சேலம், தஞ்சாவூர் உள்ளிட்ட தமிழகத்தின் முக்கிய நகரங்களிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். விழாவில் கர்நாடக சங்கீதம், வாய்ப்பாட்டு, மிருதங்கம் வாசித்தல் மற்றும் பரத நாட்டியம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன.

காலை முதல் மாலை வரை தொடர்ச்சியாக நடைபெற்ற இந்த நிகழ்வில், சென்னை மறைமலைநகர் சுருதிலயா இசைப் பள்ளியைச் சேர்ந்த 30-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். இசைப்பள்ளி ஆசிரியை மகாலட்சுமி அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். மாணவர் மோனிஷ் விஜய் பாடிய தனிப் பாடலுடன் கலை நிகழ்ச்சிகள் தொடங்கின. அதனைத் தொடர்ந்து மற்ற மாணவர்கள் பல்வேறு பக்திப் பாடல்களைப் பாடி பக்தர்களை மெய்சிலிர்க்க வைத்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவில், பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்களும், நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்த இசைத் திருவிழாவைக் கோவிலுக்குத் தரிசனம் செய்ய வந்த ஆயிரக்கணக்கான பக்தர்களும், மாணவர்களின் பெற்றோர்களும் திரளாகக் கலந்து கொண்டு ரசித்தனர்.

## கரூர் நெரிசல் விவகாரத்தில் 3-வது முறையாக சம்மன்

# தேர்தல் பணி கா ரணமாக 15 நாள் அவகாசம் கேட்டு சிபிஐக்கு விஜய் கடிதம்



சென்னை, மார்ச் 10: கரூர் பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிந்த வழக்கு விவகாரம் தொடர்பாக தவெக தலைவர் விஜய் மீண்டும் விசாரணைக்கு ஆஜராக சிபிஐ சம்மன் அனுப்பி உள்ளது. ஆனால், தேர்தல் பணி காரணமாக 15 நாள் அவகாசம் கேட்டு சிபிஐக்கு விஜய் கடிதம் எழுதியுள்ளதாக கூறப்படுகிறது. கரூர் மாவட்டம் வேலுசாமிபுரத்தில் கடந்த ஆண்டு செப்.27-ம் தேதி தவெக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். இதுதொடர்பாக சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது.

இந்த வழக்கு விசாரணைக்காக, டெல்லி சிபிஐ தலைமை அலுவலகத்தில் ஏற்கெனவே ஆஜரான தவெக பொதுச்செயலாளர் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சிடிஆர். நிர்மல் குமார் உள்ளிட்ட நிர்வாகிகளிடம் அதிகாரிகள் சுமார் 20 மணி நேரம் விசாரணை நடத்தினர். கரூர் ஆட்சியர், எஸ்.பி.யிடமும் விசாரணை நடந்தது.

இதற்கிடையே, விஜய் பிரச்சார பேருந்தில் பொருத்தப்பட்டிருந்த அதிநவீன கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் அதில் பதிவான காட்சிகள் குறித்து பேருந்து ஓட்டுநர் பரணிதரனிடமும் விசாரணை நடத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து, டெல்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு விஜய்க்கு கடந்த ஜன.6-ம் தேதி சிபிஐ சம்மன் அனுப்பியது. அதன் பேரில், ஜன.12-ம் தேதி சிபிஐ அலுவலகத்தில் விஜய் ஆஜரானார்.

அவரிடம் சிபிஐ அதிகாரிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பி 7 மணிநேரம் விசாரணை நடத்தினர். அதைத் தொடர்ந்து 2-வது முறையாக சம்மன் அனுப்பி ஜன.19-ம் தேதி 6 மணி நேரம் விசாரணை நடத்தி னர். அப்போதே, குற்றப்பத்திரிகையில் விஜய் பெயர் சேர்க்கப்படலாம் என்றும், அவர் கைது செய்யப்பட வாய்ப்பு உள்ள தாகவும் தகவல்கள் வெளியா கின. ஆனால், அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. அதேநேரம், 2-வது முறை யாக விஜய் ஆஜரானபோது சில கேள்விகளுக்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க அவ ரது தரப்பில் கூடுதல் அவ காசம் கேட்கப்பட்டதால், மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்படலாம் என்று கூறப்பட்டது.

இந்நிலையில், விஜய் இன்று (மார்ச் 10) மீண்டும் டெல்லி சிபிஐ தலைமை அலுவலகத்தில் ஆஜராகுமாறு அவருக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. இதுகுறித்து சிபிஐ அலுவலக வட்டாரங்களில், ''கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்தது தொடர்பான விசாரணையில் மேலும் சில விவரங்கள் கிடைத்துள்ளன.

அது தொடர்பாக விஜய்யிடம் விசாரித்து, தெளிவு பெற வேண்டி உள்ளது. அதற்காக அவர் மீண்டும் ஆஜராகுமாறு சம்மன் அனுப்பப் பட்டுள் ளது'' எனக் கூறப்படுகிறது.

இதற்கிடையே, சட்டப் பேரவை தேர்தல் பணிகளை சுட்டிக்காட்டி நேரில் ஆஜராக தனக்கு 15 நாள் விலக்கு அளிக்க வேண்டும், சென்னையிலேயே ஆஜராகி விளக்கம் அளிக்க அனுமதிக்க வேண்டும் என தனது வழக்கறிஞர் மூலம் சிபிஐக்கு விஜய் கடிதம் எழுதி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.செந்தில் பாலாஜிக்கும் சிபிஐ சம்மன்? - கரூர் கூட்ட நெரிசல்விவகாரத்தில் திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கும் சிபிஐ சம்மன் அனுப்பியதாக தகவல் வெளியானது. அவரது வீடு மற்றும் அலுவலகத்துக்கு இதுதொடர்பான தகவலை சிபிஐ அனுப்பியதாக டெல்லி வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால், இந்த தகவலை செந்தில் பாலாஜி மறுத்துள்ளார். ''எனது அலுவலகத்துக்க, இ-மெயிலுக்கோ எந்த சம்மனும் வரவில்லை'' என்று அவர் தெரிவித்துள்ளார்.



## இஸ்ரேல் மீது கொத்து குண்டுகளை வீசும் ஈரான்

# 8 கி.மீ. பரப்பளவுக்கு சிதறி விழுவதால் கடும் சேதம்

டெல் அவிவ், மார்ச் 10: இஸ்ரேலின் டெல் அவிவ் உள்ளிட்ட நகரங்களை குறிவைத்து ஈரான் ராணுவம் அடுக்கடுக்காக கொத்து குண்டுகளை வீசி வருகிறது. சுமார் 8 கி.மீ. பரப்பளவுக்கு இந்த கொத்து குண்டுகள் சிதறி விழுந்து வெடிக்கின்றன.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப்படைகள் மற்றும் ஈரான் இடையே 10-வது நாளாக நேற்றும் போர் நீடித்தது. ஈரானுக்கு ஆதரவாக லெபனானை சேர்ந்த ஹிஸ்புல்லா கிளர்ச்சிப் படை இஸ்ரேலை குறிவைத்து ஏவுகணைகளை வீசி வருகிறது. இதற்கு பதிலடியாக வான், தரைவழியாக லெபனான் மீது இஸ்ரேல் ராணுவம் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதில் லெபனான் முழுவதும் 339 பேர் உயிரிழந்துள்ளனர்.

மத்திய கிழக்கில் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கத்தார் உள்ளிட்ட நாடுகளில் செயல்படும் 20 அமெரிக்க ராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் ராணுவம் தொடர்ச்சியாக ஏவுகணைகளை வீசி வருகிறது. இதுவரை 6 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் ஈரான் தாக்குதலில் குவைத்தில் 6 பேர், ஐக்கிய அரபு அமீரகத்தில் 3 பேர், சவுதி அரேபியாவில் 2 பேர், இராக்கில் 2 பேர், ஓமனில் ஒருவர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், இஸ்ரேலின் ராணுவ தலைமையகமான டெல் அவிவ் மற்றும் முக்கிய ராணுவ தளங்கள், பல்வேறு நகரங்களை குறிவைத்து ஈரான் ராணுவம் தொடர்ச்சியாக ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகிறது. வான் வழி தாக்குதலை முறியடிக்க இஸ்ரேல் ராணுவம் சார்பில் அயர்ன் டோம் மற்றும் சி டோம் பாதுகாப்பு கவச அமைப்புகள் நிறு வப் பட்டுள்ளன.

ஆனால் கடந்த சில நாட்களாக இஸ்ரேலை குறிவைத்து ஈரான் ராணுவம், தடை செய்யப்பட்ட கொத்து வெடிகுண்டுகளை வீசி வருகிறது. ஈரானின் ஏவுகணை சுமார் 23,000 அடி உயரத்தில் வெடித்து 20 சிறிய குண்டுகளாக பிரிகிறது. இந்த கொத்து குண்டுகள் சுமார் 8 கி.மீ. பரப்பளவு வரை சிதறி விழுகின்றன. இவற்றை நடுவானில் இடைமறித்து அழிப்பது கடினமாக உள்ளது. இதனால் பல நகரங்களில் பெரும் சேதம் ஏற்பட்டு வருகிறது.

டெல் அவிவ் நகரில் மட்டும் 350-க்கும் மேற்பட்ட பொது பதுங்கு அரங்குகள் உள்ளன. டெல் அவிவ், ஹைபா உள்ளிட்ட நகரங்களில் பூமிக்கு அடியில் பிரம்மாண்ட மருத்துவமனைகள் கட்டப்பட்டுள்ளன. இதன் காரணமாக போர்க் காலங்களில் இஸ்ரேலில் உயிரிழப்பு குறைவாக உள்ளது.

அதர்மத்தை அகற்றிட! ஒன்றுபடுவோம்!! வென்றுவருவோம்!!!

ஸ்ரீ பைரவ சேனைகள் அறக்கட்டளை

கோவிலம்பாக்கம், சென்னை - 600 129.

கௌரவத் தலைவர்கள்

T.நடராஜன் K.முருகேசன் A.V.செந்தில் ராஜன் M.நாராயணன் A.சக்திவேல்

தலைவர்
P.ராமகிருஷ்ணன்
9444317157

செயலாளர்
T.ரவிசந்திரன்
9940536827

பொருளாளர்
S.அருண்குமார்
9994641239

துணை தலைவர்
நாஞ்சில் C.மனோகரன்

துணை செயலாளர்
T.சுயம்புலிங்கம்

துணை செயலாளர்
R.V.கணேசன்

ஆலோசகர்கள்
குலசை A.சிதம்பரம் காமதேனு G.சுந்தர் சிங்

மக்கள் தொடர்பு
தசரா நாயகி M.ஆனந்த், இசக்கி சுடலை

இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர்கள்
T.ஏழுமலை

### ஃபிபா உலகக் கோப்பை 2026:

# கால்பந்து தொடரின் முழு அட்டவணை வெளியீடு

சென்னை, மார்ச் 10: எதிர்வரும் ஃபிபா உலகக் கோப்பை - 2026 கால்பந்து தொடரின் முழு அட்டவணை வெளியாகி உள்ளது. மொத்தம் 48 அணிகள் பங்கேற்கும் இந்த தொடர் ஜூன் 11 முதல் ஜூலை 19 வரை நடைபெறுகிறது.

இம்முறை ஃபிபா உலகக் கோப்பை தொடருக்கான போட்டிகள் அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிகோ என மூன்று நாடுகளில் உள்ள 16 நகரங்களில் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் போட்டி ஜூன் 11-ம் தேதி அன்று மெக்சிகோவில் நடைபெறுகிறது. இதில் மெக்சிகோ மற்றும் தென் ஆப்பிரிக்க அணிகள் விளையாடுகின்றன. மொத்தம் 39 நாட்கள் நடைபெறும் இந்த தொடரில் 104 போட்டிகள் விளையாடப்பட உள்ளது.

இதில் குரூப் சுற்று போட்டிகள் ஜூன் 11 முதல் 27-ம் தேதி வரையில் நடைபெறுகிறது. நாக்-அவுட் சுற்றான 'ரவுண்ட் ஆப் 32' சுற்று ஜூன் 29 முதல் ஜூலை 3 வரை நடைபெறுகிறது. அதன் பின்னர் காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்கள் ஜூலை 4 முதல் 11-ம் தேதி வரையில் திட்டமிடப்பட்டுள்ளது. இறுதிப் போட்டி ஜூலை 19-ம் தேதி அன்று அமெரிக்காவின் நியூ ஜெர்ஸியில் நடைபெறுகிறது.

இந்திய நேரப்படி இரவு 9.30 மணி முதல் மறுநாள் நண்பகல் வரை ஆட்டம் நடத்தும் வகையில் அட்டவணை திட்டமிடப் பட்டுள்ளது. நடப்பு சாம்பியனான அர்ஜெண்டினா அணி 'ஜே' பிரிவில் இடம் பெற்றுள்ளது.




இந்த தொடரில் குரூப் ஆப் டெத்தாக பிரிவு 'எல்' - இங்கிலாந்து, குரோஷியா, கானா பனாமா மற்றும் பிரிவு 'ஐ' - பிரான்ஸ், செனகல், நார்வே அணிகள் இடம்பெற்றுள்ள பிரிவு அறியப்படுகிறது.

### அலங்காநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில்

# சூரிய ஒளி மின் வசதியுடன் காய்கறி தோட்டம்

மதுரை, மார்ச் 10: மதுரை மாவட்டம், அலங்கா நல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பசுமைப் பள்ளி திட்டத்தில் சூரிய ஒளி மின் வசதியுடன் காய்கறி தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை, தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை சார்பில் பசுமை பள்ளித் திட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் காய்கறித் தோட்டம், பழத் தோட்டம், மூலிகைத் தோட்டம் அமைக்கப்படுகிறது.

இதில் சூரிய ஒளி மின்சார வசதியுடன் ஆழ்துளைக் கிணறு அமைப்பது உட்பட ரூ.20 லட்சத்தில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி காய்கறி தோட்டத்தில் தக்காளி, கத்தரி, மிளகாய், வெண்டை, முள்ளங்கி, கீரை, வெங்காயம் பயிரிடப்படுகிறது.

அதேபோல், பழத் தோட்டத்தில் கொய்யா, நெல்லி, சப்போட்டா, நாவல், கொடுக்காப்புளி, எலுமிச்சை, வாழை பயிரிடப்படுகிறது. மூலிகைத் தோட்டத்தில் பிரண்டை, கற்றாழை, நொச்சி, கறிவேப்பிலை, கற்பூரவள்ளி, துளசி, ஆடாதோடா போன்றவை பயிரிடப்படுகின்றன. இங்கு விளையும் காய்கறிகள், பழங்கள், மூலிகைகளை மாணவர்கள் பயன்படுத்த வழி ஏற்படுத்தப்படுகிறது. மேலும், இந்த தோட்டங்களை பராமரிக்க தோட்டக் காவலாளி ஒருவரும் பணியமர்த்தப் பட்டுள்ளார். அதன்படி மதுரை மாவட்டத்தில் 2022-23-ம் ஆண்டு முதல் தற்போது வரை 14 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

இதில் அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இதன்மூலம் உற்பத்தியாகும் காய்கறிகள் சத்துணவுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

இதுகுறித்து அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை யாசிரியர் கா. காமாட்சி கூறுகையில், பசுமைப்பள்ளி திட்டத்தில் காய்கறி தோட்டம், பழத்தோட்டம், மூலிகைத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென தனியாக ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சூரிய ஒளி மின்சார வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மின்சார செலவு வெகுவாக குறைந்துள்ளது. கடந்த டிசம்பர் மாதம் நடவு செய்ததில், தற்போது அறுவடை செய்து வருகிறோம்.

பந்தல் சாகுபடியில் பீர்க்கை, புடலை, பாகல் ஆகியவையும் விளைந்து அறுவடை செய்து சத்துணவுக்கு பயன்படுத்துகிறோம். இதன்மூலம் மாணவர்கள் சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் அவசியம், இயற்கையை நேசிப்பதையும் அறிந்து கொள்கின்றனர் என்று கூறினார்.

# கொடைக்கானல் பிரையன்ட் பூங்காவில் பூண்டு கண்காட்சி!

பழநி, மார்ச் 10: தமிழகத்தில் முதன்முறையாக கொடைக்கானல் பிரையன்ட் பூங்காவில் 63-வது மலர் கண்காட்சியையொட்டி, பூண்டு கண்காட்சியும் நடத்தப்பட உள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மேல்மலை கிராமங்களான மன்னவனூர், பூண்டி, கவுஞ்சி, பூம்பாறை, கூக்கால், பழம்புத்தூர், கிளாவரை உள்ளிட்ட பகுதிகளில் 900 ஹெக்டேர் பரப்பளவில் மலைப்பூண்டு சாகுபடி செய்யப்படுகிறது.

இந்த மலைப்பூண்டு பாரம்பரிய வகை மற்றும் அதிக மருத்துவத் தன்மை கொண்டது. அதனால் கொடைக்கானல் மலைப் பூண்டுக்கு புவிசார் குறியீடும் வழங்கப்பட்டுள்ளது.

பயிரிட்ட 120 நாட்களில் மலைப்பூண்டு அறுவடைக்கு வரும். கொடைக்கானல் மலைப்பகுதியில் விளையும் பூண்டு சாம்பல் நிறத்தில் காணப்படும். இதில் காரத்தன்மையும் அதிகம்.

புகை மூட்டம் செய்து பதப்படுத்தி வைத்தால் ஓராண்டு வரை கெடாமல் இருக்கும். கொடைக்கானல் மலைப்பூண்டு உட்பட நாடு முழுவதும் உள்ள பல வகையான பூண்டு, பூண்டின் முக்கியத்துவம் குறித்து பொது மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் தமிழகத்தில் முதன் முறையாக கொடைக்கானலில் கண்காட்சி மற்றும் பயிற்சிப் பட்டறை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பிரையன்ட் பூங்காவில் மே மாதம் 63-வது மலர் கண்காட்சி மற்றும் கோடை விழா நடைபெற உள்ளது. மலர் கண்காட்சியை பார்க்க தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருவர்.

அந்த சமயத்தில் பொது மக்கள், சுற்றுலா பயணிகள் பயனடையும் வகையில் பூண்டு கண்காட்சி நடத்த இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம் அனுமதி அளித்துள்ளது.

பழைய டிரஸ்ட்
(Trust)
தேவைப்படுவோர்
தொடர்புக்கு:
99 44 616 559




தமிழ்நாடு புத்தக விற்பனையாளர்கள் சங்கம், தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு, தூத்துக்குடி தெற்கு மாவட்டம் & வாசிப்பு இயக்கம், தூத்துக்குடி மாவட்டம் & JCI திருச்செந்தூர் இணைந்து நடத்தும்
1ம் ஆண்டு
திருச்செந்தூர் புத்தகத் திருவிழா
10 ஆயிரம் தலைப்புகளில் 1 லட்சம் புத்தகங்கள் ஒரே இடத்தில் விற்பனைக்கு உள்ளது
நாள் :மார்ச் 14 முதல் மார்ச் 25 வரை
நேரம் :காலை10.00 மணி முதல் இரவு 09:00 மணி வரை
இடம்: சொர்ணம் மஹால்
சிவன் கோவில் பின்புறம், இரும்பு ஆர்ச் அருகில்,மேல மாட வீதி, திருச்செந்தூர்
CELL : 95661 14006 | 95662 61515 | 88703 76637
அனைத்து புத்தகங்களுக்கும் 10% சிறப்பு தள்ளுபடி
வாழ்த்துக்களுடன்
ஸ்ரீ கலைமகள் கல்வி குழுமம் திருச்செந்தூர்
இந்தியாவில் ARTS & SCIENCE முதல் ABRORD MBBS வரை
அட்மிஷன் நடைபெறுகிறது
தொடர்புக்கு : +91 - 7395826881 , +91 - 8220926881




Owned, Printer and Published by G.SASIREKA from No: 64/80, Vivehananda Colony, Vadapalani, Chennai - 26, Printing at Annai Abirami Achagam, No: 24, Venguchetty Street, Poonga Nagar, Chennai - 3. Editor: V.S.N.SHARMA.